# Deposition of Witness
## (Chapter XXXIII Code of Criminal Procedure)
## In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.767/2024 |
| Police station | : | NT.P.S |
| Deposition of witness for Prosecution | : | L.w.1/P.w.1 |
| Name | : | தேவநாதன் |
| Father Name/Husband Name | : | ராஜலிங்கம் |
| Village | : | புலவன்குப்பம் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 24.03.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது முடப்பள்ளி, புலவன்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் பாண்டிச்சேரி SETC ல் ஓட்டுநர் மற்றும் நடத்துனராக பணிபுரிந்துவருகிறேன். சம்பவ தினத்தன்று நாகப்பட்டினம் SETC டெப்போவில் நடத்துனராக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சாட்சி சரவணனன் சம்பவத்தன்று மேற்படி டெப்போவில் ஓட்டுனராக பணிபுரிந்தார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு SETC C-978 NSS பதிவெண் சரியாக நியாபகம் இல்லை. மேற்படி பேருந்தில் வேளாங்கண்ணியிலிருந்து காலை 10.15 மணிக்கு புறப்பட்டு சென்னை வந்து கொண்டிருந்த போது கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட் லிருந்து கலெக்டர் ஆபிஸ் நடுவே மாலை சுமார் 03.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் குடிபோதையில் வந்து எங்களது பேருந்தை வழிமறித்தார்கள். வண்டியை ஏன் வழிமறிக்கிறீர்கள் என்று கேட்டதற்க்கு அவர்கள் கேட்கும் நிலையில் இல்லை. மேற்படி பேருந்தை ஓட்டி வந்த சரவணனன் என்பவரை பேருந்தை எடுக்க விடவில்லை. அவர் எடுக்க முற்பட்டபோது ஆஜர் எதிரிகள் அவரை தகாத வார்த்தையால் பேசி பேருந்தில் ஏறி ஓட்டுநர் சரவணனை 1 வது எதிரி அடித்துவிட்டார். ஏன் பேருந்தை வழிமறித்து

ஓட்டுநரை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்க்கு என்னையும் 1 வது எதிரி இடது காதில் அடித்துவிட்டார். அதில் எனக்கு இடது காதில் இரத்தம் வந்தது. ஆஜர் எதிரிகள் தொடர்ந்து எங்களை அடிக்க முற்பட்டதால் நானும் ஓட்டுநரும் பேருந்தை நிறுத்திவிட்டு கலெக்டர் ஆபிஸ் பக்கம் இறங்கி ஓடினோம். எதிரிகள் கற்களை வைத்துக் கொண்டு எங்களை விரட்டி அடித்தனர். அதன் பின்னர் பொதுமக்களில் யாரோ ஒருவர் போலிஸ்க்கு போன் செய்ததால் சம்பவ இடத்திற்க்கு போலிசார் வந்தனர். பின்னர் அவர்கள் உதவியுடன் பேருந்தை பாதுகாப்பாக கடலூர் TNSTC பணிமனையில் நிறுத்திவிட்டு கடலூர் GH க்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். பின்னர் 2 நாட்கள் கழித்து காவல் நிலையம் வந்து புகார் மனு அளித்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு யில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**கையொப்பத்துடன் கூடிய புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் எனது காதில் இரத்த கசிவு நிற்க்க வில்லை என்பதால் தனியார் மருத்துவமனையில் மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் உள்ள திருத்தங்கள் யார் திருத்தினார் என்றால் ஒரு சில தவறுகளை நான் திருத்தி இருப்பேன். புகாரில் நான் கையொப்பம் இட்ட இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் எண் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் முதல் பக்கத்தில் கடைசி வரியில் தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி தானாக முன்வந்து நான் 2 புகார் அளித்தேன் என்று கூறுகிறார். 2 புகாரையும் ஒரே நாளில் தான் கொடுத்தேன், திருத்திய புகாரையும் சேர்த்து கொடுத்தேன். அன்றைய தினம் அன்றைய பேருந்தில் வந்த பயணிகளை அழைத்துக் கொண்டு சென்னை சென்றோமா என்றால் இல்லை கடலூரில் இறங்கி அவர்கள் வேறு பேருந்து மூலம் சென்று விட்டார்கள். பயணிகளை மாற்று வண்டியில் அனுப்பி வைத்ததால் பயணச்சீட்டுக்கான தொகையை திருப்பி கொடுக்கவில்லை. நான் அரசு மருத்துவமனையில் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேன் அதன்பிறகு தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அந்த தனியார் மருத்துவமனை கடலூர் அரசு மருத்துவமனைக்கு எதிரே உள்ளது. அந்த தனியார் மருத்துவமனையில் நான் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை வந்து வந்து சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே சரவணா மருத்துவமனையில் நான் சிகிச்சை பெறவில்லை. நான் எனது தொடர் சிகிச்சை சம்மந்தமான ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் சரியாக நியாபகம் இல்லை. நான் தற்போதும் பணியில் தான் இருந்து வருகிறேன். எனக்கு ஊனம் ஏற்பட்டதாக பணியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டதா என்றால் இல்லை. அது

சம்மந்தமாக நானும் என் பணிமனையில் எந்த விலக்கும் கோரவில்லை. எனக்கு தற்போது 2 காதுகளும் நன்றாக கேட்கிறது. எந்த வண்டியில் வந்து என் பேருந்தை மறித்தார்கள் என்றால் பஜாஜ் பல்சர். அந்த வண்டியை வினோ என்பவர் தான் ஓட்டிவந்தார். சம்பவத்திற்க்கு முன்பு எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடலூர் அரசு மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட உடல் ரீதியான பிரச்சனைகள் சம்மந்தமாக மருத்துவரிடம் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். மருத்துவரிடம் எத்தனை பேர் என்னை தாக்கியதாக சொன்னேன் என்று சொன்னால் 2 பேர் தாக்கியதாக சொன்னேன். பேருந்தை எத்தனை பேர் மறித்தார்கள் என்றால் 2 பேர் தான் மறித்தார்கள். பேருந்தை எதற்காக எதிரிகள் மறித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் பேருந்து அன்றைய தினம் கடலூர் போஸ்ட் ஆபிஸ் நிறுத்தம் வழியாகத்தான் பாண்டி சென்றது. எதிரிகளை மேற்படி பிரச்சனைக்கு பிறகு நான் பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்க்கு எத்தனை போலிசார் வந்தார்கள் என்றால் சுமார் 7 முதல் 8 போலிசார் வந்தார்கள். அன்றைய தினம் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றோம். அன்றைய தினம் நான் புகார் அளிக்கவில்லை. வினோ என்ற எதிரியின் பெயரை நான் எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் நீதிமன்றத்திற்க்கு வந்த பிறகு தான் தெரிந்து கொண்டேன். எனது இடது காதில் இரத்தம் வந்த விவரத்தை புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மருத்துவரிடமும் இந்த விவரத்தை சொல்லியுள்ளேன். 1 வது எதிரி என்னை இடது காதில் அடித்துவிட்டார் என்று எனது புகாரிலோ போலிஸ் விசாரனையிலோ கூறியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. உங்களை அடித்த நபரின் அங்க அடையாளங்கள் குறித்து போலிசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலிசார் சம்பவ இடத்திற்க்கு வரும் போது எங்களை தாக்கிய நபர் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. எங்கள் பேருந்து அன்றைய தினம் அதிவேகமாக ஓட்டிச்சென்றதால் பொதுமக்கள் தான் எங்களை தாக்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் எங்களுக்கு பிரச்சனை வந்துவிடும் என்பதால் மருத்துவமனைக்கு சென்று பொய்யாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் நாங்கள் தொடாந்து எங்கள் பணியை செய்யாததால் எங்கள் நிறுவனத்திற்க்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்று சொன்னாலும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள பின்னிட்டு உயர் அதிகாரிகள் கொடுத்த அறிவுறுத்தலின் படி கால தாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் சொல்வது போல் எனக்கு உடல் ரீதியாக எந்த காயமும் ஏற்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எங்கள் நிர்வாகத்திற்க்கு உதவி செய்ய காவல் துறை எதிரிகளை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு அனுசரனையாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.767/2024 |
| Police station | : | NT.P.S |
| Deposition of witness for Prosecution | : | L.w.2/P.w.2 |
| Name | : | சரவணன் |
| Father Name/Husband Name | : | ராமமூர்த்தி |
| Village | : | கருக்கை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 24.03.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது செம்மேடு அஞ்சல், கருக்கைத்தெற்குத்தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது பாண்டிச்சேரி SETC ல் ஓட்டுநர் உடன் நடத்துனராக பணிபுரிந்துவருகிறேன். அ.சா.1 சம்பவத்தன்று வந்த பேருந்தின் நடத்துனர். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவ தினத்தன்று நாகப்பட்டினம் SETC டெப்போவில் ஒட்டுநராக பணிபுரிந்தேன். கடந்த 27.03.2021 அன்று SETC C-978 NSS பதிவெண் TN-01-AN-3226. என்ற பேருந்தில் வேளாங்கண்ணியிலிருந்து காலை 10.15 மணிக்கு புறப்பட்டு சென்னை வந்து கொண்டிருந்த போது கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட் லிருந்து கலெக்டர் ஆபிஸ் நடுவே பைபாஸ் அருகே மாலை சுமார் 03.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் குடிபோதையில் எனது பேருந்தின் இடது பக்கமாக வந்து வழிமறித்து அவர்களது இரு சக்கர வாகனத்தை எனது பேருந்தின் முன்பக்கமாக குறுக்கே பேருந்தை எடுக்கவிடாமல் நிறுத்தினார். வண்டியை ஏன் வழிமறிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள் பேருந்தின் மேல் ஏறி தகாத வார்த்தைகளால் அசிக்கமாக தேவடியா பசங்களா என்று கேட்டு திட்டி என்னையும் நடத்துனரையும் அடித்தார்கள். அதில் நடத்துனரின்

இடது பக்க காதில் சவுல் கிழிந்து விட்டது. பின்னர் மேற்படி பேருந்தை பயணிகள் எடுக்க சொன்னதால் நான் பேருந்தை எடுக்க முற்பட்டபோது எதிரிகள் பேருந்தை எடுக்க விடாமல்தடுத்தனர். பின்னர் நாங்கள் பேருந்தில் இருந்த இறங்கிவிட்டோம். ஆஜர் எதிரிகள் எங்களை விடாமல் தொடர்ந்து மீண்டும் அடித்தார்கள். அதன் பின்னர் வண்டியில் இருந்த பயணிகளில் யாரோ ஒருவர் போலிஸ்க்கு போன் செய்ததால் சம்பவ இடத்திற்க்கு டவுன் ஸ்டேசனிலிருந்து போலிசார் வந்தனர். போலிசாரை பார்த்தவுடன் அணைவரும் கலைந்து விட்டனர். பின்னர் போலிசார் உதவியுடன் பேருந்தை பாதுகாப்பாக கடலூர் பெரியார் பணிமனையில் நிறுத்திவிட்டு கடலூர் GH க்கு சென்று நடத்துனர் சிகிச்சை எடுத்துக்கொண்டார். அவரை மருத்துவர் பரிசோதனை செய்ததில் அவருக்கு இடது காதில் இரத்தம் வந்து கொண்டே இருந்ததால் அவரை அங்கே உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தார்கள் நான் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். பின்னர் 2 நாட்கள் கழித்து அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் மனு அளித்தார். பின்னர் அ.சா.1 தனியார் மருத்துவமனையில் மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

அன்றைய தினம் எங்களுடைய பயணம் முழுமையடைந்ததா என்றால் முழுமையடையவில்லை. அன்றை தினம் நான் கடலூரில் தான் இருந்தேன். எத்தனை பேர் எங்கள் வண்டியை மறித்தார்கள் என்றால் முதலில் வண்டியை மறித்தது 2 நபர்கள் தான் அதன்பிறகு 4 நபர்கள் வந்தார்கள். முதலில் வந்த 2 நபர்கள் பல்சர் வண்டியில் வந்தார்கள். அதன்பிறகு வந்த 4 நபர்கள் அங்கு எவ்வாறு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அ.சா.1 ல் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தாரா என்றால் இல்லை, அதன்பிறகு சரவணா மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். அவர் எப்போது சரவணா மருத்துவமனைக்கு சென்றார் என்றால் மறுநாள் காலை சென்றார். அரசு மருத்துவமனையில் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்ற பிறகு என்னுடன் தான் இருந்தார். அன்றைய தினம் எதிரிகள் எதற்காக எங்கள் பேருந்தை மறித்தார்கள் என்றால் எந்த காரணமும் இல்லை அவர்கள் இருவரும் மது போதையில் இருந்தார்கள். வினோ என்ற எதிரி தான் எங்கள் பேருந்தை மறித்த வண்டியை ஓட்டி வந்தார். எதிரியின் பெயர் வினோ என்று நான் எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போது தெரிந்துகொண்டேன். சம்பவ இடத்திற்க்கு போலிசார் வந்தார்களா என்றால் வந்தார்கள். அப்போது எதிரிகள் எங்கே இருந்தார்கள் என்றால் அப்போது எல்லாம் கிளம்பிவிட்டார்கள். அ.சா.1 க்கு காதில் இரத்தம் வந்ததை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எங்கள் பேருந்து

அன்றைய தினம் அதிவேகமாக ஓட்டிச்சென்றதால் பொதுமக்கள் தான் எங்களை தாக்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் எங்களுக்கு பிரச்சனை வந்துவிடும் என்பதால் மருத்துவமனைக்கு சென்று பொய்யாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் நாங்கள் தொடாந்து எங்கள் பணியை செய்யாததால் எங்கள் நிறுவனத்திற்க்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்று சொன்னாலும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள பின்னிட்டு உயர் அதிகாரிகள் கொடுத்த அறிவுறுத்தலின் படி கால தாமதமாக அ.சா.1 புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னாலும் சரியல்ல. எங்கள் நிர்வாகத்திற்க்கு உதவி செய்ய காவல் துறை எதிரிகளை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு அனுசரனையாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.